# ஸ்பிக் பண்ணைச்செய்தி


| விலை ரூ. 20<br>Price Rs. 20/- | மலர் - 4<br>Volume - 4 | இதழ் - 6<br>Issue - 6 | இருமாத இதழ்<br>Bi-monthly | டிசம்பர் 2014 - ஜனவரி - 2015<br>December 2014 - January - 2015 |
|---|---|---|---|---|




# புத்தாண்டே வருக ! வளம் பல தருக !

உழவர் வாழ்வு உயர்ந்திடவே - நாம்
உழவையும் தொழிலாய் ஏற்றிடுவோம் !

என்ற நமது குறளுக்கிணங்க விவசாயத்தை ஒரு தொழிலாக ஏற்று நடத்திட, இன்று பல வேளாண் இளைஞர்கள் முன் வந்துள்ளனர். வேளாண் உற்பத்திப் பெருக்கத்திற்குப் பல தொழில் நுட்பங்களைப் புகுத்திச் சாதனை படைத்து வருவது மிக்க பெருமையான செய்தியாகும். உற்பத்தி செய்வது மட்டுமல்லாது, உற்பத்தியான வேளாண் பொருட்களைச் சிறப்பாகச் சந்தைப்படுத்தலும் மிக முக்கிய பங்காகும். ஒவ்வொரு வேளாண் இளைஞரும் ஆண்டிற்கு ஒரு ஏக்கரில் என்ன நிகர லாபமாக பெற்றோம் என்பதைக் கணக்கிட்டு அதற்கேற்ப செயல் வடிவம் கொடுக்க வேண்டும். அனைத்து விவசாயிகளும் சரியாகத் திட்டமிட்டு செயல்படுதல் மிகவும் இன்றியமையாததாகும். வரும் காலங்களில் விவசாயம்தான் முதன்மையான தொழில் என்பதை உணர்ந்து செம்மையாகச் செயல்படுதல் மிக்க அவசியம். இதில் வேளாண் இளைஞர்களின் பங்கு பெரிதும் போற்றப்படும்.

"சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்" என்பதற்கிணங்க, நவீன வேளாண்மைக்கு நீர் சேமிப்பும், மண்வளமும் பெரும் பங்கு வகிக்கின்றன. இன்று "நீர்" ஒரு இன்றியமையாத இடுபொருள். இதை எவ்வாறெல்லாம் சேமிக்க வேண்டும் என வேளாண் பெருமக்கள் அனைவரும் புரிந்து செயல்படுதல் வேண்டும். இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை ஓரளவு திருப்தியாகப் பெய்திருக்கிறது. உபரி நீரின் வருகையால் இவ்வாண்டு இரண்டு முறை மேட்டூர் அணை 100 அடிக்கு மேல் நீர்மட்டம் உயர்ந்தது. இயற்கையின் பரிசாகக் கிடைக்கப் பெற்ற இந்த நீரைச் சீராகச் சிறப்பாகப் பயன்படுத்த ஒவ்வொரு விவசாயியும் முன்வர வேண்டும். சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம், கசிவு நீர் குட்டை போன்ற உயரிய தொழில்நுட்பங்களையெல்லாம் செயல்படுத்த வேண்டும்.



அடுத்து, மண்வளத்தைப் பாதுகாக்க, நாம் பல வழிகளிலும் சிந்தித்துச் செயல்பட வேண்டும். அனைத்துப் பயிர்களுக்கும், அதிக அளவில் இயற்கை உரங்களையும் இயற்கை இடுபொருட்களையும் பயன்படுத்த வேண்டும். தேவையான அளவு மட்டும் இரசாயன உரங்களை இடுதல் வேண்டும். இவ்வாறு சரியாக இடும்போது தான், இரசாயன உரங்களின் முழுப்பயனும் சேதாரமில்லாமல் பயிருக்குக் கிடைக்கிறது. விவசாயிகள் இவற்றையெல்லாம் சரியான முறையில் பயன்படுத்த முன்வர வேண்டும். இயற்கையான இடுபொருட்களைப் பயன்படுத்துவதால், மண்ணில் பேரூட்டச் சத்துக்களுடன் நுண்ணூட்டச்சத்துக்கள் மற்றும் அங்ககப் பொருட்கள் பெருகி மண்வளம் செழிக்கிறது.

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

உழவு செய்தல் மற்றும் நீர் பாய்ச்சுதல் இவற்றையெல்லாம் விட மண்ணின் வளம்காக்க இயற்கை உரங்கள் இடுதல் அவசியம் என திருவள்ளுவர் இங்கே தெளிவுப்படுத்தியுள்ளார். எனவே மண்ணைப் பொன்னாக்க ஒவ்வொரு விவசாயியும் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

இன்றைய விவசாயி நாளைய தொழிலதிபர் என்ற உயரிய நோக்கத்துடன் சிறப்பாய் செயல்படுவோம். தமிழக விவசாயிகள் அனைத்து வளங்களையும் பெற்று வளமுடன் வாழ புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள் !

அன்புடன்

அஸ்வின் C. முத்தையா
தலைவர், ஸ்பிக் நிறுவனம்

# ஸ்பிக் பண்ணைச் செய்தி

இரு மாத இதழ்

**ஆசிரியர்**
T. விஜயகுமார் டேவிட்

**வெளியிடுபவர்**
N. நாச்சியப்பன்

**அச்சிடுபவர்**
சித்ரகண்ணன் பிரஸ்ஸ்
சிவகாசி.

**ஆலோசகர் குழு**
எஸ். நாராயணன்
எஸ்.ரகுநாத ரெட்டி
வி.வெங்கடேஷ்
எஸ். பாஸ்கரன்



முகவரி :
**ஸ்பிக் பண்ணை செய்தி ஸ்பிக் லிமிடெட்**
முத்தையாபுரம், தூத்துக்குடி – 628 005
போன் : 0461 – 2356222
e-mail : agriservices@greenstar.net.in


## உள்ளடக்கம் ...


| | |
|---|---|
| புத்தாண்டே வருக | 2 |
| வேளாண் பயிற்சி | 3 |
| கொத்துக் கொத்தாய் கொடித்தக்காளி | 4 |
| பூண்டு மிளகாய் பூச்சிமருந்து | 7 |
| கங்கவல்லியில் கருத்தரங்கு | 7 |
| ஜெர்ஸி பசுவுக்கு நிகரில்லை | 8 |
| ஒரே கல்லுல பல மாங்காய் | 12 |
| பூமுத்து | 13 |
| தக்காளிக்கு" எபோலா" | 14 |
| வில்லிசேரியில் எலுமிச்சை விழா | 15 |
| கைகொடுக்கும் கற்பூரவள்ளி | 16 |
| பண்ணைக்கேற்ற கருவிகள் | 18 |
| கெட்ட முட்டையா நல்ல முட்டையா? | 21 |
| 35 வருஷமா முல்லை பயிரிடுறேன் | 22 |
| காய்கறி மகத்துவ மையம் | 26 |
| கேள்வி பதில் | 28 |
| ஸ்பிக் கீர்த்தி | 30 |


# இலவச வேளாண் பயிற்சி

*28.01.2015 முதல் 30.01.2015 வரை*

- துல்லிய பண்ணையம்
- சொட்டு நீர்
- மண் வளம்
- நபார்டு கடன்
- காய்கறி பயிரிடுதல்
- பயிர் பாதுகாப்பு

*04.02.2015 முதல் 06.02.2015 வரை*

- பசுமைக் குடில்
- கால்நடை பராமரிப்பு
- வருமானம் தரும் காய்கறிகள்
- மண்வளம்
- சொட்டு நீர்
- உரமிடுதல்

- முன்பு பயிற்சி பெறாதவர்களுக்கு மட்டும்
- வயது வரம்பு : 18 முதல் 50க்கு கீழ்
- குழந்தைகளை கூட்டி வரக்கூடாது
- உணவு, தங்குமிடம், இலவசம்
- பயிற்சி இடம் – ஸ்பிக், தூத்துக்குடி.
- உயர் வருமானம் பெறவிரும்புவோருக்கு மட்டும்

தொடர்புக்கு ...
T.விஜயகுமார் டேவிட், : 0461–2356222,
செல் : 94433 25738, 94870 25738



# கொத்துக் கொத்தாய்

"தொடர்ந்து 6 வருஷமா கொடித் தக்காளி பயிர் செய்து வருகிறேன். எங்க ஊர்ல எல்லா விவசாயிகளுமே காய்கறிகளைத் தவிர வேற பயிர் செய்கிறது இல்லை. பெரும்பாலானோர் தக்காளி, கத்தரி, மிளகாய் பயிர்களையும் ஒரு சிலர் மல்லிகையையும் பயிரிடுறாங்க. மத்தப் பயிர்களைக் காட்டிலும் காய்கறிகள் பயிர் செய்தால் லாபம் அதிகம். ஆனால், கொடித்தக்காளி மாதிரி எந்தப் பயிரிலேயும் லாபம் எடுக்க முடியாது. போன வருஷம் நாங்க 50 சென்ட் கொடித் தக்காளி போட்டோம். அதுல 4 $\frac{1}{2}$ லட்சம் ரூபாய் வருமானம் பார்த்துருக்கிறோம். நானும், அண்ணன் சிவராஜூம் முழுமையா விவசாயந்தான் செய்கிறோம்" என்கிறார் 30 வயதான தர்மபுரி மாவட்டம், சீரியனஹள்ளி விவசாயி மாதேஸன்.

"கொடித் தக்காளி பயிர் செய்ய ஏற்ற இரகம் US 3140 ஹைபிரிட் தான். காரணம் என்னன்னா, அறுவடை பண்ணின பிறகு 15 நாள் ஆனாக்கூட காய் கெடாமத் தாக்குப் பிடிக்கும். ஹைபிரிட் தக்காளிகளுக்கும் நாட்டுத் தக்காளிக்கும் இது தான் பெரிய வித்தியாசம்.




நிறைய விவசாயிங்க தக்காளி பயிர் செய்ய பயப்புடுறாங்க. தக்காளி விலை அடிக்கடி ஏறும், இறங்கும். சில நேரங்களில் கிலோ தக்காளி 2 ரூபாய்க்குக் கூட கேட்க ஆள் இருக்காது. 5 ரூபாய்க்குக் கீழே வித்தாலே கையப்புடிச்சுரும். விலை ஏறும் போது கிலோ 40 ரூபாய்க்கு மேலேயும் விற்கும். ஹைபிரிட் தக்காளில பல ரகங்கள் இருக்கு. ஒண்ணு புளிப்புத் தக்காளி, நம்மநாட்டுத் தக்காளிய மாதிரியே புளிப்பு அதிகமானதா இருக்கும். இதைத்தான் சமையலுக்கு விரும்பி வாங்குவாங்க. இன்னொண்ணு, பெங்களூர் தக்காளி. இது அப்படியே சாப்பிடறதற்கும், ஜூஸ் போடுறதற்கும் நல்லா இருக்கும்."

"வளருகிற தன்மையப் பொறுத்து தக்காளியில 3 வகைகள் இருக்குது. முதல் வகை, செடித்தக்காளி. இது 3 அடிக்கு மேல வளராது, படர்ந்து அகலமா கிளையடிச்சு வளரும். இதற்கு செடிக்குச் செடி அதிக இடைவெளி தேவை."

"இரண்டாவது வகை, கொடித் தக்காளி இது அதிகமாகப் படராது. மாறாக உயரமா 6 -7 அடிக்கு கூட வளரும். பெரும்பாலும் பசுமைக் குடில்களில் தான் இதைப்பயிர் செய்யுறாங்க. மிக அதிக அளவில் மகசூல் தரக்கூடியது. இஸ்ரேல் தேசத்துல முழுக்க முழுக்க இதைத்தான் பயிர் செய்யுறாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன்."

"மூன்றாவது ரகம் மேலே சொன்ன

# கொடித் தக்காளி

ரெண்டு ரகத்துக்கும் மத்தியில ஒரு இரகம் இருக்கு அது தான் நடுத்தரக் கொடித் தக்காளி. உயரம் 4 அடிக்கு மேல வளரும். ஒரளவு படரவும் செய்யும். இந்த ரகத்தைத் தான் நாங்க பயிர் செய்யிறோம். சரி, எப்படிப்பயிர் செய்தோம்ங்கிறத சொல்றேன் கேளுங்க. எங்க மண்ணு நல்ல வளமான பூமி. வண்டல் கலந்த தண்ணீர் தேங்காத, எந்த பணப்பயிரும் செய்கிறதற்கு ஏத்த நிலம். 50 சென்ட் நிலத்தில தான் இந்த கொடித் தக்காளியப் பயிர் செய்தோம்."

"முதல் உழவுக்குப் பிறகு 5 ட்ராக்டர் லோடு சாணி எரு அடிச்சோம். விவசாயத்துறை யிலிருந்து கிடைச்ச அசோஸ்பைரில்லம் 2 கிலோ, பாஸ்போபேக்டீரியா 2 கிலோவையும் கூட போட்டோம். மறுபடி 2 உழவு ஓட்டி 2 அடி இடைவெளியிலே பார் போட்டோம். இங்கெல்லாம் ஊருக்கு ஊர் காய்கறி நாற்று நர்சரிகள் இருக்குது. அவங்களே அந்தந்த சீசனுக்கு ஏற்ற மாதிரி பசுமைகுடில் நர்சரியில பல விதமான ஹைபிரிட் காய்கறி இரகங்கள் குழித்தட்டுகள்ல போட்டு 25-30 நாட்கள் வளர்த்து ரெடியா வைத்திருப்பாங்க. நாம் நாத்து வளர்க்க வேண்டிய வேலை இல்லை."

"அண்ணன் சிவராஜ் தான் பக்கத்து ஊர்லயிருந்து 30 நாள் வயதான US 3140 ஹைபிரிட் தக்காளி நாற்று வாங்கி வந்தார். செடிக்கு செடி 2 அடி இடைவெளி விட்டு நட்டோம். குழித்தட்டு நாத்துங்கிறது னாலே வேர் அறுந்து போகாம நட முடிஞ்சுது. ஒன்று தெரிஞ்சிக்கிடுங்க, நாட்டு இரகத்த விட உரமாகட்டும் மருந்தாகட்டும் ஹைபிரிட்டுக்கு மூணு மடங்கு குடுத்தாகணும். உரங்களக் கொடுக்கக் கொடுக்கத் தான் காய்ப்பு வரும். ஒரு உதாரணம் சொல்றேன். நம்மநாட்டுப் பசு தோட்டத்திலே கட்டிப் போட்டா சுத்தி சுத்தி மேய்ஞ்சியே பாலக் குடுத்துருது. ஆனால் ஜெர்ஸி பசுவ அப்படி மேயவுட்டு பால் கரக்க முடியுமா?"

"நாட்டு பசுவக் காட்டிலும் நாலு மடங்கு தீவனம் தின்னும். அதுக்கு ஏத்தாப்புல 10 லிட்டர் 15 லிட்டர் பால் கொடுக்கும். தீனி போடப் போடப் பால் சுரக்கும். அந்த மாதிரிதான் ஹைபிரிட் தக்காளியும். பயிர் செய்கிறதற்கு நாட்டு தக்காளிய விட நாலு மடங்கு செலவு செய்யணும். செஞ்சோம், அதுக்கான பலனையும் அடைஞ்சோம்"

"அடியுரமாக 50 சென்டுக்கு 2 மூடை டி.ஏ.பி. போட்டோம்.



**50 சென்ட் கொடித் தக்காளி போட்டதுல 4 1/2 லட்சம் ரூபாய் வருமானம் பார்த்தோம்.**

நடுத்தரக் கொடித் தக்காளிக்கு ஸ்திரமா கம்பம் நட்டு கொடி கட்டலன்னா காய் கனத்தத் தாங்காம செடி சாய்ந்து விடும். ஆகவே, செடி வளர்ந்து 2 அடி வந்தவுடனேயே கொம்பு ஊன்றி கொடி கட்டிட்டோம். நட்ட ஒரு மாதத்துக்குப் பிறகு மறுபடி 2 மூடை காம்ப்ளக்ஸ் உரம் வைச்சோம். சரியா 2 மாசத்துல முதல் அறுவடை எடுத்தாச்சு. இந்தக் கொடித் தக்காளி இரகம் கொத்துக் கொத்தா காய்க்கும். ஒரு கொத்துல 7 - 8 தக்காளி இருக்கும். 3, 4 தக்காளிய எடை போட்டால் 1 கிலோ தேறும். மூணு நாளைக்கு ஒரு தடவ அறுவடை செய்தோம். முதல் அறுவடைக்குப் பிறகு ஒரு மூடை பொட்டாஷ், ஒரு மூடை காம்ப்ளக்ஸ், ஒரு மூடை சி.ஏ.என் (Calcium Ammonium Nitrate) போட்டோம். சி.ஏ.என் குளுகோஸ் மாதிரி. வாரத்துக்கு ஒரு முறை ஒரு மூடை சி.ஏ.என் போட்டாத்தான் கொடித் தக்காளி மறுபடி துளிர் எடுத்து காய்க்கும். மொத்தம் $1\frac{1}{2}$ மாசத்துல வருமானம் பூராவையும் எடுத்துட்டோம். 3 நாளைக்கு ஒரு முறை 60 கால் தக்காளி கிடைத்தது. (1 கால் என்பது 80 கிலோ எடையாகும்) ஆக 1 பறிப்புக்கு 4800 கிலோ தக்காளி கிடைச்சது. ஆக 10 பறிப்பிலேயே 60 கால் (48 டன்) தக்காளி அறுவடை செய்துட்டோம்.”

“அப்பத்தான் புதுப்பிரச்சனை ஆரம்பிச்சுது. தக்காளி சைஸ் பெரியதா இருந்ததுனாலே லோக்கல் வியாபாரிங்க எடுக்க மாட்டேன்னுட்டாங்க. நல்ல வேளையா இராமநாதபுரம் வியாபாரி கை கொடுத்தாங்க. ஆரம்பித்திலே ஒரு கிரேட் (Crate) ரூ.350 லிருந்து ரூ.500 வரைக்கும் போச்சுது. (ஒரு கிரேட் என்பது 20 கிலோ). ஆரம்பத்துல, கிலோ 20 ரூபாய்க்கு வாங்க ஆரம்பிச்ச வியாபாரிங்க போகப்போக கிலோ ஒரு ரூபாய்க்கு இறங்கிட்டாங்க. மொத்தமா வந்த வருவாயக் கணக்குப் பார்த்தா சராசரியா எனக்கு ஒரு கிலோ 10 ரூபாய்க்கு வரவாயிருக்குது. அதாவது 48 டன் தக்காளி



தக்காளிக்கு எப்படிக் கொடி கட்டப்பட்டிருக்கிறது என்பதை கவனியுங்கள் !

வித்ததுலே சுமார் 5 லட்சம் வரவு. செலவு 50,000 வச்சுக்கிடுங்க. மிச்சம் $4\frac{1}{2}$ லட்சம் லாபம். உரம் பூச்சி மருந்துகள் வாங்கின செலவத்தவிர லேபர் செலவு கிடையாது. நாங்க அண்ணன் தம்பிங்க எல்லா வேலைகளையும் செய்வோம் பவர் ஸ்பிரேயர் இருக்குது. 2 பேட்டரி ஸ்பிரேயர் இருக்குது. பேட்டரி ஸ்பிரேயர் விலை ரூ.3500. பணம் ரூ.1500 கட்டினோம். மிச்சம் மானியம். தக்காளிலே இலைவாடல் நோய் தான் பெரிய பிரச்சனை யா இருந்தது. பூப்பதற்கு முன்பதாக இலை கருகல் நோய் வந்தது. பாலக்கோடு, கருமலையாண்டவர் அக்ரோ சர்வீஸ்ல தான் பூச்சி மருந்துகள் வாங்குவோம். நல்லா தரமான ஆலோசனை சொல்லி விவசாயிங்களுக்கு மருந்து கொடுப்பாங்க.






## கங்கவல்லியில் கருத்தரங்கு

சேலம், ஆத்தூர் அருகிலுள்ள கங்கவல்லி என்ற கிராமத்தில் 20.11.2014 அன்று நடந்த கருத்தரங்கிற்கு சுமார் 220 விவசாயிகள் உற்சாகமாக வந்திருந்தனர். ஸ்பிக் நிறுவனத்தினரால் மஞ்சள், நெல், காய்கறி பயிரிகளுக்கென நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட ஸ்பிக் நிறுவன அதிகாரிகள் மண்வளத்தின் முக்கியத்துவத்தைக் குறித்தும் மண்வளத்தைக் கூட்ட ஸ்பிக் சுரபி, ஸ்பிக் ஜிப்ஸம், ஸ்பிக் சிங்க் சல்பேட், ஆகியவை முக்கிய பங்கு வகிப்பதாகவும் ஸ்பிக் சுரபி என்ற இயற்கை உரத்தில் புண்ணாக்குகளின் கலவையுடன் மஞ்சள் சேர்க்கப்பட்டு இருப்பதால் மண்ணின் பொல பொலப்புத் தன்மையை அதிகரித்து நுண்ணுயிரிகளையும் பெருகச் செய்கிறது எனவும் கூறினார்கள்.

## பூண்டு மிளகாய் பூச்சிமருந்து



என்னுடைய செடி முருங்கைப்பயிரை ஒரு வகைப் பச்சைப்புழு தின்று நாசப்படுத்திக் கொண்டிருந்தது. எந்தப் பூச்சி மருந்துக்கும் கட்டுபடவில்லை. 1 கிலோ பூண்டு, 1 கிலோ பச்சை மிளகாய், 1 கிலோ இஞ்சி, 1 கிலோ சின்ன வெங்காயம் இவற்றை லேசாக நீர் விட்டு மிருதுவாக அரைத்துக் கொண்டேன். மேற்கண்ட கலவையை சுமார் 4 லிட்டர் கோமியத்தில் 1 வாரம் ஊறவைத்தேன். இதன் சாற்றை வடிகட்டிப் பிரிப்பதற்கு வசதியாக, தேவையான நீர் சேர்த்து 2வது முறை வடிகட்டினேன். வடி கட்டிய நீர்க்கரைசலை 10 பாகங்களாகப் பிரித்து 10 டாங்க் நீரில் பவர் ஸ்பிரேயர் கொண்டு காலை வேளையில் தெளித்தேன். புழு இருந்த இடம் தெரியவில்லை - எப்போதும் வென்றான் முத்துலிங்கம்.

# ஜெர்ஸி பசுவுக்கு நிகரில்லை

Dr.P.விக்ரம் சக்ரவர்த்தி, Dr.K. செந்தில்குமார்,
கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல்.

கறவை மாடுகளைப் பொருத்த வரை வெளிநாட்டுப் பசுக்கள் அதிக அளவில் பால் தரக்கூடியவை. ஒரு நாளில் வெளிநாட்டு ரகமான ஜெர்ஸி (Jersey) சுமார் 20 லிட்டர் பாலும், ஹோல்ஸ்டின் ஃப்ரீசியன் (Holstein Friesian) 25-30 லிட்டர் பாலும் தரவல்லது. ஆயினும் இவை தமிழ்நாட்டின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றவையல்ல. ஆனால் இவற்றுடன் நாட்டுரகப் பசுக்களை கலப்பு (Cross) செய்யும் போது உருவாகும் கலப்பினப் பசுக்கள் தமிழ்நாட்டின் தட்பவெப்ப சூழ்நிலைக்கு ஏற்புடையதாக உருவாகின்றன. இவற்றில் ஜெர்ஸி கலப்பினப் பசுக்கள் ஒரு நாளில் 10 முதல் 15 லிட்டர் பால் தருவனவாகவும், தமிழ்நாட்டின் தட்பவெப்ப சூழலுக்கு மிக தங்களை நேர்த்தியாகஒத்துப் போகச் செய்து கொள்வதாலும், **ஜெர்ஸி பசுவுக்கு நிகரானது வேறு இல்லை** என்று சொல்லலாம்.

மேலும், விவசாயிகள் தனி மாடாகவும் 10 முதல் 20 மாடுகள் கொண்ட பண்ணையாகவும் உருவாக்க ஏற்றதாகவும் இருப்பதால் உலகிலேயே இரண்டாவது பெரிய கறவை மாடு இனமாக ஜெர்ஸி இனம் கருதப்படுகிறது. இவ்வினம் இங்கிலாந்து நாட்டின் ஜெர்ஸி தீவில் தோன்றியது. உயர்தரமான பாலுக்காக இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜெர்ஸி பாலில் அதிக புரதச்சத்தும், தாதுஉப்புகளும் அடங்கியுள்ளன.

இதில் அதிக கரோட்டின் நிறமி உள்ளதால் இந்தப்பாலுக்கென்றே உயர்ந்த நிறம் உண்டு. இந்த இனம் செம்மைகலந்த கருமைநிறத்தினை உடையது. சில மாடுகளில் வெண்புள்ளிகளும் காணப்படும். அதிகபால் தரும் ஜெர்ஸி பசுக்களின் எடை 450 கிலோ வரை பெருகும். எடை அதிகமாவதால் நடை தடுமாற வாய்ப்புள்ளது. ஆயினும் தடுமாறா



வண்ணம் ஸ்திரமாக இருக்குமாறு இதன்காலில் குளம்புகள் வலிமையாக விரிந்து காணப்படும்.

கறவை மாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கீட்டின்படி, ஜெர்ஸி இனப்பசுக்கள் மற்ற இனங்களைவிட அதிக கருவுறும் தன்மையும், குறைந்த செலவில் அதிக பால் கொண்டவையாகவும் அறியப்பட்டுள்ளது. இதன் பாலில் 18% புரோட்டின் சத்தும், 20% க்கும் அதிக கால்சியம் சத்தும், 5.3% கொழுப்புச்சத்தும், 15% எஸ்.என்.எப்.வும் உள்ளது. 365 நாட்களும் பால் கொடுக்க வல்ல இப்பசு முதல் கன்று ஈனும் வயது 26-30 மாதங்கள். இதன் கன்று இடைவெளி 13-14 மாதங்கள்.

நம் நாடு வெண்மைபுரட்சியின் தொடர்ச்சியாகவும் மற்றும் பல புதிய தொழில் நுட்பங்களாலும் பால் உற்பத்தியில் தற்சமயம் முதன்மையான இடத்தை பெற்றிருக்கிறது. பால் மற்றும் பால் சார்ந்த பொருட்களின் உற்பத்தியிலும் பல மடங்கு பெருகியுள்ளது. இதனால் தனி நபர் நுகர்வுக்கு கிடைக்கும் பால் அளவு அதிகரித்துள்ளது. அன்றாட வாழ்வில் பால் அல்லது பால் சார்ந்த பொருட்கள் உணவு வகைகளில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

ஜெர்ஸி பசு வளர்ப்பு என்பது கறவை மாடுகளை தேர்ந்தெடுத்தல், கன்று பராமரிப்பு, இனப்பெருக்க மேலாண்மை, தீவனம் அளித்தல், உடல் நலம் பேணுதல், உற்பத்திக்கு உதவாத மாடுகளை அவ்வப்போது களைதல் போன்ற பல தரப்பட்ட மேலாண்மை மேற்கொள்ளும்போது தான் கறவையில் கணிசமான வெற்றி கிடைக்கிறது. கறவை மாடு பராமரிப்பில் மொத்தச் செலவில் தீவனத்தின் செலவு மட்டும் சுமார் 60-70 சதவீதம் ஆகும். ஆகவே, சரியான தீவன மேலாண்மையை மேற்கொள்ளுவதன் மூலம் தீவனத்தின் செலவை குறைப்பது, சேதாரத்தை குறைப்பது மற்றும் மாடுகளுக்கு தரமான தீவனத்தை அளிப்பது ஆகியன முக்கியத்துவம் பெருகிறது. மறுபுறம் தீவனத்தின்



தேவையானது மாடுகளின் உடல் எடை, வயது, பருவம், பால் அளவு, கொழுப்புச் சத்து மற்றும் மாடுகளின் உடல் இயக்கங்களைப் பொறுத்து மாறுபடுகிறது. இதனைக் கணக்கில் கொண்டு சரியான தீவன மேலாண்மையைக் கடைபிடிப்பதன் மூலம் மாடுகளின் நலன் மற்றும் திறனை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்.

**ஜெர்ஸி கறவை இனங்களைத் தெரிவு செய்ய வழிமுறைகள் :**

கன்றுகளையோ அல்லது ஜெர்ஸி பசுக்களையோ சந்தையில் தேர்ந்தெடுத்து வாங்குவது ஒரு கலை ஆகும். வாங்கும் போது கீழ் காணும் வழிமுறைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

எப்பொழுதும் சந்தையிலிருந்து ஒரு ஜெர்ஸி மாட்டை வாங்கும் போது அந்த இனத்தின் பண்புகளையும் பால் தரும் அளவையும் அறிந்திருக்க வேண்டும்.

- மாட்டின் வரலாற்றுப் பதிவேடுகள் ஏதேனும் இருந்தால் அதன் மூலம் மாட்டின் தன்மையை அறிந்து கொள்ளலாம்.
- முதல் ஐந்து கன்றுகளில் தான் ஜெர்ஸி மாட்டின் பால் அளவு அதிகமாக இருக்கும்.
- எனவே நாம் வாங்கும் மாடானது முதல் அல்லது இரண்டாவது ஈத்தாக இருத்தல்

நலம்.

## அதிக பால் தரும் மாட்டின் பண்புகள்

- நிறைய பால் உற்பத்தி கொடுக்கும் ஜெர்ஸி மாட்டின் தோற்றம் பார்வைக்கு வயிறு அல்லது மடி பெரியதாக தோற்றமளிக்கும். கண்கள் பளிச்சென்றும், கழுத்து மெலிந்தும் இருக்க வேண்டும்.
- மடி வயிற்றுடன் நன்கு இணைந்திருக்க வேண்டும். மேலும் இரத்த நாளங்கள் புடைத்துக் காணப்பட வேண்டும்.
- மடியின் காம்புகள் சராசரி அளவுடன் சீரான இடைவெளியுடன் இருக்க வேண்டும். தொடுவதற்கு பஞ்சுபோல் இருக்க வேண்டும்.
- மார்பு விரிந்தும் தோல் மிருதுவாகவும் மினுமினுப்பாகவும் மூக்கு பெரியதாகவும் இருக்க வேண்டும்.
- முடிந்த அளவு பாலைக் கறந்து பார்த்து வாங்குவது நல்லது.

**ஜெர்ஸிக்குத் தரும் தீவனங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.**

*1. அடர் தீவனம் :* இது ஜெர்ஸி மாடுகளுக்குத் தேவையான மாவுச் சத்து, புரதச்சத்து, கொழுப்புச்சத்து, தாது உப்புகள், உயிர் சத்துக்கள் (வைட்டமின்கள்) சரியான அளவில் கலந்து அளிக்கப்படும் தீவனமாகும்.

*2. பசுந்தீவனம்* என்பது நீர்சத்தும் நார்ச்சத்தும் அடங்கிய தானியம், பயிறு, புல் மற்றும் மர வகைகள் ஆகும்.

*3. உலர் தீவனம்* நார் சத்து நிறைந்ததாகும். உதாரணத்திற்கு வைக்கோல், சோளதட்டு ஆகும்.

### அடர் தீவனம் தயாரித்தல் :

இது ஜெர்ஸி கறவைமாடுகளின் பாலில் கொழுப்பு சத்தை அதிகரிக்க உதவுகின்றது. உள்ளூரில் கிடைக்கக்கூடிய தவிடு, புண்ணாக்கு மற்றும் தானியங்களைப் பயன்படுத்திக் குறைவான விலையில் தயாரிக்கலாம். அடர் தீவனம் தயாரிக்கும்பொழுது தீவனத்தில் சேர்க்கப்படும் பொருட்கள் பூஞ்சை நோயால் பாதிக்கப்படாமலும் மிகவும் பழமையானதாகவும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கீழ்கண்ட மூலப்பொருட்கள



வாங்கி அரைத்து சரியான அளவு கலந்து கறவை மாடுகளுக்கு கொடுக்கலாம்.

ஐந்து லிட்டர் பால் கொடுக்கும் கறவைமாட்டின் உடல் பராமரிப்பிற்கும் பால் உற்பத்திக்கும் 3 கிலோ அடர் தீவனமும், 15 முதல் 20 கிலோ பசுந்தீவனமும், 5 முதல் 7 கிலோ உலர் தீவனமும் அளிக்க வேண்டும். பசுந்தீவனங்கள் கிடைக்காத சமயங்களில் 1.5 கிலோ அடர் தீவனமும், 2 முதல் 3 கிலோ உலர் தீவனமும் அதிகமாக அளிக்க வேண்டும். ஐந்து லிட்டருக்கு மேல் பால் தரும் கறவை மாடுகளுக்கு மேற்கூறிய தீவனங்களுடன் 500 கிராம் அடர் தீவனம் ஒவ்வொரு லிட்டர் பால் உற்பத்திக்கும் கொடுக்க வேண்டும்.

சினை மாடுகளுக்கு, கடைசி 3 மாத சினை காலத்தில் எப்பொழுதும் அளிக்கும் பசும் மற்றும் உலர் தீவனங்களுடன் 2 கிலோ அடர் தீவனம் அதிகமாக தரவேண்டும்.

கன்றுகளுக்கு, பிறந்த 3 முதல் 4 வாரங்களில் தீவனங்களை நாக்கில் தடவி விடுவதன் மூலம் விரைவில் தீவனங்களை உட்கொள்ள ஆரம்பிக்கும். ஆரம்ப காலத்திலே திட உணவுகளை வழங்கும்பொழுது முன் வயிறு விரைவில் வளர்ச்சியடையும். அடர் தீவனங்களை கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்ப காலங்களிலே கொடுப்பதால் கன்றுகள் 6 மாத வயதை அடையும் பொழுது 1.5 லிருந்து 2.0 கிலோ அடர் தீவனங்களை உட்கொள்ள ஆரம்பிக்கும். இவ்வாறு தீவனம் அளிப்பதால் கன்றுகளை 10 மாத வயதிலே பருவமடைந்து 20 - 22 மாதங்களில் முதல் கன்றை ஈனும்.






# முற்றிலும் இலவசம் !!!



ஸ்பிக் பண்ணைச்
செய்தியை நண்பர்களுக்கு
அறிமுகப் படுத்துங்கள்.
விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களைக்
கற்றுக்கொள்ளும் நோக்கோடு
ஸ்பிக் நிறுவனம்
ஒரு சேவையாக
ஸ்பிக் பண்ணைச் செய்தி
மலரை வெளியிடுகிறது.
நீங்கள் பயன்பட்டது போல
உங்கள் நண்பர்களும்
பயன்பெற விரும்புகிறோம்.
விரும்பும் நண்பர்கள்
ஆசிரியரை 94433 25738 என்ற
எண்ணில் தொடர்பு கொள்ளட்டும்.



# ஒரே கல்லில் பல மாங்காய்கள்


ம.மணிமாறன்,
உதவிப்பேராசிரியர் (மண்ணியல்)
காந்திகிராம் கிராமிய பல்கலைக்கழகம்,
காந்திகிராம், திண்டுக்கல்.






'ஒரே கல்லில் பல மாங்காய்கள்' - எனச் சொல்வதைக் கேள்விப்பட்டிருப்போம். வேளாண்மையில் பயிர்த்தொழிலோடு அதனுடன் தொடர்புடைய உபதொழில்களைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு விஞ்ஞான முறைப்படி இணைப்பது ஒருங்கிணைந்தப் பண்ணையத் திட்டம் ஆகும். இதன் அடிப்படைத் தத்துவம் யாதெனில், வேளாண் சார் தொழில்களில் ஒரு தொழிலின் கழிவுப் பொருள் அடுத்த தொழிலில் இடுபொருளாக பயன்படுத்துவதாகும். ஒருங்கிணைந்தப் பண்ணையத் திட்டம் என்பது பயிர் தொழிலுடன் கறவை மாடு வளர்ப்பு, வேளாண் காடுகள் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, சாண எரிவாயு கலன் அமைத்தல், இயற்கை உரம் தயாரித்தல், மற்றும் முயல், பன்றி, பட்டுப்புழு வளர்ப்பு ஆகியவை ஆகும். விவசாயிகளின் நிரந்தரமற்ற வருவாயை மேம்படுத்தவும் கூலியாட்கள் பற்றாக்குறையைத் தவிர்ப்பதையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதுதான் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம்.

**ஒருங்கிணைந்தப் பண்ணையத்தின் பயன்கள் :**

- ஒருங்கிணைந்த பண்ணையம் விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதோடு வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது.
- சுய வேலை வாய்ப்பினையும், வேளாண் சார்ந்த சிறு தொழில்களையும், முன்னேற்றம் அடையச் செய்துள்ளது.
- ஒருங்கிணைந்த பண்ணையத்தில் பண்ணை கழிவுகள் மறுசுழற்சிக்கு உட்படுத்தப்பட்டு சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதோடு மூலப் பொருட்கள் விரயம் ஆவதைத் தடுக்கிறது.
- ஒருங்கிணைந்த பண்ணையத்தில் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பில் வரும் கழிவுப் பொருட்கள் மக்கிய நிலையில் தொழு உரமாக பயிர் உற்பத்தியில் பயன்படுத்தப் படுகிறது.
- மறு சுழற்சி, மூலப்பொருள் திறன் மேம்பாடு மற்றும் குறிப்பிட்ட அளவுள்ள நிலத்தை பயன்படுத்தும் திறன் ஆகியவற்றின் மூலம் நீடித்த மண்வளம் மற்றும் குறிப்பிட்ட அளவு நிலத்தில் இருந்து கிடைக்கும் வருவாய் மற்றும் இலாபம் மும்மடங்காக்கப்படுகிறது.
- காய்கறிகள், பால், முட்டை, தேன், காளான் மற்றும் இறைச்சி போன்றவற்றின் மூலம் நிலையான வருவாய் கிடைப்பதோடு, புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, தாதுக்கள் மற்றும் வைட்டமின்கள் போன்ற உணவு ஊட்டச்சத்துக்களாக கிடைக்கின்றன.








- வேளாண் வனவியலின் மூலம் மண் அரிப்பு தடுக்கப்படுகிறது.
- ஒருங்கிணைந்த பண்ணையத்தில் ஊடு பயிராக அல்லது வரப்போரத்தில் தீவனப் பயிர்களை பயிரிடுவதால் பசு, ஆடு மற்றும் முயல் போன்ற கால்நடைகளுக்கு தேவையான ஊட்டச்சத்து நிறைந்த உணவு கிடைக்கிறது.
- தண்ணீரின் தேவையைப் புரிந்து கொண்டு ஒருங்கிணைந்த பண்ணையம் மேற்கொள்ளப்படுகிறது.

"ஒரு காசு பேணின் இரு காசு தேறும்" என்பது பழமொழி. தற்போதைய பொருளாதார நிலையை மனதில் கொண்டு ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்தை விவசாயிகள் அமல்படுத்த வேண்டும். "உழுகிற காலத்தில் ஊர் சுற்றிவிட்டு அறுக்கிற காலத்தில் அரிவாள் கொண்டு போனானாம்" என்பது போல காலத்தில் ஒருங்கிணைந்த பண்ணையத்தை அமைக்காமல் காலம் கடந்தபின் பயனை எதிர்பார்ப்பதில் பிரயோஜனம் ஏதுமில்லை.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்றார் பாரதியார். வந்தனை செய்வோம் என்ற பாரதியாரின் கவிதைக்கு கருத்து என்னவென்றால் தொழிலில் நாட்டம், அதன் மூலம் முன்னேற்றம் என்பதேயாகும். முயன்று ஒன்றுபட்டு உழவில் நாட்டம் கண்டால் தானாக வரும் உழவருக்கு உயர்வு.

## பூமுத்து


தர்மபுரி மாவட்டம் நாகதாசம்பட்டியைச் சேர்ந்த பூமுத்து பார்ப்பதற்கு எளிமையான தோற்றம் கொண்டவர் நல்ல மனிதர். பெயருக்கு ஏற்றப்படி பூக்கடை வைத்து வியாபாரம் செய்கிறார். உபதொழிலாக நாட்டு இரக எலுமிச்சையைப் பதியன் (Air Layering) போட்டு விநியோகம் செய்து வருகிறார். தரமான நாற்றுகளை மட்டுமே உற்பத்தி செய்து பல விவசாயிகள் பயன்அடையும்படி செய்கிறார். எலுமிச்சை நாற்றுகள் வேண்டுமென்றால் திரு.N.K.பூமுத்து அவர்களை அலைபேசி **93444 69645** என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுங்கள்.



# “தக்காளிக்கு எபோலா”

த. விஜயகுமார் டேவிட், ஆசிரியர், பண்ணைச்செய்தி




மனிதனுக்கும் மிருகங்களுக்கும் பூஞ்சனம், பாக்டீரியா மற்றும் வைரஸ் கிருமிகளால் நோய் உண்டாகிறது. பொதுவாக பூஞ்சனம் மற்றும் பாக்டீரியாக்களினால் வரும் நோய்களைக் கட்டுப்படுத்தி விடலாம். வைரஸ் கிருமிகளால் உண்டாகும் நோய்களைக் கட்டுப்படுத்துவது அவ்வளவு எளிதானதல்ல. ஏனெனில் இவை தங்கள் உடற்கூரை மாற்றிக் கொண்டேயிருக்கும். மேற்கு ஆப்ரிக்க தேசத்தில் எபோலா என்ற வைரஸ் நோய் மிக வேகமாகப் பரவி வருவதைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். இந்த நோயால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோர் இறந்துவிட்டனர். காரணம் இது ஒரு வைரஸ் நோய். இந்நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. 100 பேரை இந்நோய் பாதித்தால் அதில் 70 பேருக்கு மேல் இறந்து விடுகின்றனர். பிழைத்த 30 பேர்கூட தங்கள் சொந்த உடலிலிருக்கும் எதிர்ப்பு சக்தியினால் தான் பிழைத்திருக்கிறார்கள். உலக சுகாதார அமைப்பின் கணக்கெடுப்பின்படி மேற்கு ஆப்ரிக்காவில் மட்டும் இதுவரை 5000 பேருக்கு மேல் மரணம் அடைந்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.


பயிர்களுக்கு பூஞ்சானம் பாக்டீரியாக்களினால் வரும் நோய்களைக் கட்டுப்படுத்தி விடலாம். ஆனால் வைரஸால் வரும் நோய்களைக் கட்டுப்படுத்த எந்தப்பூச்சி மருந்தும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. உங்கள் தக்காளிச் செடிகளும் வைரஸ் நோய்க் கிருமிகளால் பாதிக்கப்படுகின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள். எபோலா நோயைப் போல இதுவும் கட்டுப்படுத்த முடியாத நோய் ஆகும். உங்கள் தக்காளிச் செடிகளின் இலைகள் மஞ்சள் நிறமாகி மேல் நோக்கி சுருண்டு நிற்கிறதா? புதிய இலைகள் கூடச் சிறியதாகி சுருண்டு கொள்கிறதா? தக்காளியில் பூக்கள் தோன்றியும் காய் பிடிக்காமல் உதிர்ந்து விடுகிறதா? வைரஸ் நோய் தாக்கியிருக்கிறது என்று அர்த்தம்.

தக்காளி வைரஸ் நோய்களில் இரண்டு வகை உண்டு. 1. தேமல் நோய் 2. இலைசுருட்டை நோய். பெரும்பாலான விவசாயிகள் இந்த வைரஸ் நோய் தாக்குதலினால் தக்காளியில் நஷ்டம் அடைந்து வருகின்றனர். விஷயம் தெரியாமல் பல விலையுயர்ந்த பூஞ்சன நோய் மருந்துகளை அடித்தும் செலவு செய்ததும் தான் மிச்சம் என்றாகி விடுகிறது.

1) முதலில் இந்நோய் காணப்பட்டவுடன் தாக்கிய செடிகளை பிடிங்கி அழித்து விட வேண்டும். ஏனென்றால் இச் செடிகள் மூலமாகத்தான் மற்ற செடிகள் பாதிக்கப்படுகின்றன.
2) இந்நோயை படத்தில் காணப்படும் வெள்ளை ஈக்கள் தான் பரப்புகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்த ஒரு டேங்கிற்கு அதாவது 10 லிட்டர் நீருக்கு 4 மில்லி கான்ஃபிடார் (இமிடாகுளோப்ரிட்) அல்லது 8 கிராம் உலாலா (ஃப்ளோனிகாமிட்) என்ற மருந்தை கலந்து தெளிக்கவும்.

3) விதைகளை சேகரிக்கும் போது இந்நோய் இல்லா வயலிலிருந்து தெரிவு செய்யுங்கள். அல்லது தரமான நிறுவனத்தின் ஹைபிரிட் விதைகளை வாங்குங்கள்.




4) தக்காளி நாற்றுக்களைப் பசுமைக் கூடாரத்தில் பாதுகாப்புடன் வளர்த்து நடவு செய்யுங்கள்.

5) கண்டிப்பாக வைரஸ் தாக்கிய செடிகளுக்கு பென்வாலரேட் (Fenvalerate), சைபர்மெத்ரின் (Cypermethrin) போன்ற சிந்தடிக் பைரித்ராய்ட் (Synthetic Pyrethroid) மருந்துகளைத் தெளிக்கக்கூடாது.

6) வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டச் செடிகளைக் கையால் தொட்ட பிறகு வேறு செடிகளைத் தொடக்கூடாது.

# வில்லிசேரில் எலுமிச்சை விழா






கோவில்பட்டி, வில்லிசேரி தமிழகத்திலேயே அதிக அளவு எலுமிச்சை சாகுபடி செய்யும் கிராமம் என்பது அனைவரும் அறிந்ததே. அங்குள்ள எலுமிச்சை விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப உத்திகளைக் கடைபிடித்து மகசூலை அதிகரிக்கும் வழி முறைகளையும் தொழில் நுட்பங்களையும் விளக்க 14.11.2014 அன்று ஒரு கருத்தரங்கம் ஸ்பிக் கிரின்ஸ்டார் நிறுவனத்தின் சார்பில் நடத்தப் பட்டது. இவ்விழாவில் தோட்டக்கலைத் துறை, விவசாயத்துறை, வேளாண் பல்கலைகழக பேராசிரியர்கள் மற்றும் ஸ்பிக் அதிகாரிகள் கலந்துக் கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



# கைகொடுக்கும் கற்பூர வள்ளி

த. விஜயகுமார் டேவிட்
ஆசிரியர், பண்ணைச்செய்தி

இந்தியாவிலுள்ள வாழை ரகங்களிலேயே அதிக இனிப்புச்சுவை கொண்டது கற்பூரவள்ளி. பழங்களின் தோலின் மேல் சாம்பல் படிந்தது போல் காணப்படும். பழங்கள் திண்ணமாகவும், பழுத்த பின்பும் காம்புடன் ஒட்டிக் கொண்டும் இருக்கும் தன்மைகொண்டவையாக இருப்பதால் எளிதில் அழுகுவதில்லை. கற்பூரவள்ளியின் அடிமரம் பெருத்தும், மரம் உயரமாகவும் இருக்கும். இலைகள் மிக நீளமாகவும் அகலமாகவும் வளரக்கூடியவை என்பதால் இலை வாழைக்கு மிகவும் ஏற்றது. கற்பூரவள்ளி நடுவதற்கு பிப்ரவரி முதல் ஏப்ரல் மாதம் வரை ஏற்ற மாதங்களாகும். நட்ட 12 மாதங்களில் அறுவடை செய்யலாம். நல்ல வடிகால் வசதியுடன் கூடிய தோட்டக்கால் மண் சிறந்தது. ஆனால் நடைமுறையில் விவசாயிகள் களிமண் நிலத்தில் கூட கற்பூரவள்ளி நட்டு வெற்றி பெற்றுள்ளனர். சற்று களர் தன்மையான மண்ணில் கூட பயிரிடலாம்.

நிலத்தை மூன்று உழவு ஓட்டிய பின் ஏக்கருக்கு 10 டன் தொழுவுரம் 4 கிலோ அசோஸ்பைரில்லம் 4 கிலோ பாஸ்போ பேக்டீரியா, இட்டு 8 அடி இடைவெளிகளில் பார்கள் அமைத்து மரத்துக்கு மரம் 5 அடி இடைவெளியில் ஒரு வாழைக்கன்றை நட வேண்டும். சொட்டு நீர் அமைத்துக் கொண்டால் மிகச் சிறந்தது. நீர் மற்றும் உர விரயத்தை தடுக்கலாம். நடுமுன் வாழைக்கிழங்கை தெறிவு செய்யும் போது மிக ஜாக்கிரதையாக வாடல் நோய் தாக்காத தோப்பிலிருந்து தெறிவு செய்து கொள்ளுங்கள். வாடல் நோய் தாக்கிய வாழையின் தண்டு வெடித்தும், இலைகாம்புகள் உடைந்து, இலைகள் பழுத்துத் தொங்கியும் காணப்படும். வாழைக் கிழங்கை குறுக்காக வெட்டிப் பார்த்தால் இளஞ்சிவப்பு மற்றும் கருப்பு நிறமாகவும் காணப்படும்.

**இலைகள் மிக நீளமாகவும் அகலமாகவும் வளரக்கூடியவை என்பதால் இலை வாழைக்கு மிகவும் ஏற்றது**

வாழை கிழங்கை நடுமுன், எமிசான் என்ற மருந்தை 1 லிட்டர் நீரில் 1 கிராம் என்ற அளவில் கரைத்து அதில் வாழைக்கிழங்கை முழுவதும் நனையுமாறு 5 நிமிடம் ஊற வைக்க வேண்டும். பிறகு கட்டியாக கரைத்த சாணிக் கரைசலில் கிழங்கை முக்கி எடுத்து, அதன் மேல் 5 கிராம் பியுரடான் குருணையைத் தூவி பிறகு நட வேண்டும்.

உரமிடுதல் : நட்ட மூன்றாவது மாதத்திலிருந்து உரமிட ஆரம்பிக்க வேண்டும். ஒரு வாழை மரத்திற்கு இட வேண்டிய அளவு கிராம் கணக்கில்

| இட வேண்டிய நேரம் | ஸ்பிக் 20 : 20 காம்ப்ளக்ஸ் | அமோனியம் குளோரைடு | பொட்டாஷ் |
|---|---|---|---|
| 3 வது மாதம் | 100 கிராம் | -- | 200 கிராம் |
| 5 வது மாதம் | 50 கிராம் | 60 கிராம் | 200 கிராம் |
| 7 வது மாதம் | 25 கிராம் | 60 கிராம் | 150 கிராம் |
| ஸ்பிக் சுரபி | 50 கிராம் | 50 கிராம் | 50 கிராம் |

நட்ட 3வது, 5வது, 7வது, மாதங்களில் ஒவ்வொரு முறையும் 1 லிட்டர் நீருக்கு 5 கிராம் சிங்க் சல்பேட், 2 கிராம் பெர்ரஸ் சல்பேட், 3 கிராம் போராக்ஸ், 10 கிராம் பொட்டாசியம் நைட்ரேட் இவற்றை கரைத்து இலைகளில் நன்கு படுமாறு தெளிக்க வேண்டும். 7 மாதத்திற்குப் பிறகு பஞ்சகாவ்யா தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள். 1 லிட்டர் பஞ்சகாவ்யாவுடன் 3 கிராம் போராக்ஸ் கரைத்து தாரின் மீது 20 நாட்களுக்கு ஒரு முறை அடிக்க வேண்டும். வாழை நட்டதிலிருந்து 3 மாதம் வரை உளுந்து, பாசிப்பயிறு, நிலக்கடலை போன்ற பயிர்களை ஊடுபயிராக பயிர் செய்து உபரி லாபம் எடுத்துக் கொள்ளலாம். தேவையில்லாத பக்க கன்றுகளையும் இலைகளையும் அவ்வப்போது கழித்து வாழைத் தோப்பை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பக்கக் கன்றை மட்டும் மருதாம்புக்காக விட்டுவிடவும். மேற்கூறிய முறைகளைக் கடைபிடித்து பயிர் செய்தால் ஒரு ஏக்கரில் நட்ட 1000 மரங்களில் குறைந்தபட்சம் 950 தரமான தார்களை பெற முடியும். ஒவ்வொரு தாரிலும் 12 முதல் 15 சீப்புகளும், ஒரு சீப்புக்கு சுமார் 20 காய்களும் பெற முடியும். ஒரு தார் ரூபாய் 200 விலை போனால் கூட செலவு போக குறைந்த பட்சம் ரூபாய் 1.5 லட்சம் லாபமாக பெறலாம்.

**1000 மரங்களில் குறைந்தபட்சம் 950 தரமான தார்களை பெற முடியும். ஒவ்வொரு தாரிலும் 12 முதல் 15 சீப்புகளும், ஒரு சீப்புக்கு சுமார் 20 காய்களும் பெற முடியும்.**



# பண்ணைக்கேற்ற கருவிகள்



செந்தில்குமார், முதுநிலை விஞ்ஞானி,
மத்திய வேளாண் பொறியியல் ஆராய்ச்சி நிலையம்,
கோயமுத்தூர்.

வேளாண்மைத் தொழிலில் நிலத்தை உழுது பண்படுத்துதல், விதைத்தல், களை எடுத்தல், பயிர் பாதுகாப்புக்கான மருந்து தெளித்தல், பயிர் அறுவடை போன்ற பல்வேறு பணிகளைக் காலத்தே செய்து முடித்திடல் மிகவும் முக்கியமானதாகும். இப்பணிகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேளாண்மையை இயந்திரமயமாக்க வேண்டுவது அத்தியாவசிய மானது.

குறிப்பாக நிலத்தைப் பயன்படுத்த பண்ணைக் கருவிகள் அவசியமாகத் தேவைப்படுகிறது. செடிகளும், பயிர்களும் பயிர் செய்வதற்கு ஏற்ற விதத்தில் நிலம் பலவித நோக்கங்களுடன் பண்படுத்தப் படுகிறது. அவைகளாவன

1. பயிர் செய்வதற்கேற்றவாறு மண்ணை இளகச் செய்தல்
2. இயற்கை உரம், தொழு உரம், சருகு குப்பை போன்றவைகளை மண்ணோடு கலக்கி மக்கி உரமாகச் செய்தல்.
3. களைகளை அப்புறப்படுத்தி களைகள் வளர்வதைத் தடுத்தல்.
4. மண்ணில் காற்றோட்டம் இருக்குமாறு செய்தல்.
5. மழைநீர் வீணாகாமல் மண்ணின் நீர் உறிஞ்சு தன்மையை அதிகரிக்கச் செய்தல்.
6. புழு பூச்சி, பூச்சிகளின் முட்டை ஆகியவற்றை அழித்தல்.
7. பயிர்வகை, பாசன வகைக்கேற்றவாறு நிலத்தைச் சமப்படுத்தி பாத்தி அல்லது வாய்க்கால் அமைத்தல்.

மண்ணை பயன்படுத்துவதில் உழவு முக்கியப் பங்கு வகிக்கின்றது. முதலில் நிலத்தை நன்றாக, வேண்டிய ஆழம்வரை உழுது மண்ணை நன்றாகப் புரட்ட வேண்டும். இவ்வுழவிற்கு உபயோகப் படுத்தப்படும் கருவிகள் முதல்நிலை உழவுக் கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன. முதல் நிலை உழவிற்குப் பயன்படுத்தப்படும் பண்ணைக் கருவிகள், அவைகளின் நுண்ணிய விவரங்கள் ஆகியவை பின்வருமாறு

### 1. வளை பலகைக் கலப்பை (Mould board plough)

கொழுக்கள் தேயத் தேய முன்னால் இழுத்து வைத்துக் கொள்ளக்கூடிய வகையில் இரும்புச் சட்டத்துடன் (bar point) பொருத்தப்பட்டுள்ளன. கொழுவானது மண்ணிற்குள் ஊடுருவிச் சென்று மண்ணை வெட்டுகிறது. இப்படி கொழுவினால் வெட்டப்பட்ட மண் இரும்பு வார்ப்பினால் மேலே எடுத்துச் செல்லப்பட்டு, தூள்தூளாக உடைக்கப்பட்டு புரட்டப்படுகிறது. இரும்பு வார்ப்பின் (mould board) வளைவிற்கேற்றவாறு மண் நன்றாக புரட்டப்படுகிறது.



டிராக்டரைக் கொண்டு இழுக்கும் கலப்பைகள் பெரிய உருவம் உடையவை. டிராக்டரின் குதிரைச் சக்திக்கு ஏற்றவாறு இரண்டு அல்லது மூன்று கலப்பைகள் ஒரு பொதுவான சட்டத்துடன் இணைக்கப் பட்டுள்ளன. இச்சட்டத்தை டிராக்டருடன் இணைப்பதன் மூலம் இக்கலப்பையை மேலே ஏற்றவும் கீழே இறக்கவும் முடிகிறது. உழும் ஆழம் ஒரே சீராக அமைவதற்கு ஆழக்கட்டுப்படுத்தி உருளையை தேவைக்கேற்ற உயரத்தில் கைப்பிடியின் உதவியைக் கொண்டு மாற்றி வைத்துக் கொள்ளலாம். பொதுவாக இவ்வித இரும்பு கலப்பைகளில் கத்தி உருளை (coulter) எனப்படும் பாகமும் இணைப்பு (jointer) எனப்படும் பாகமும் ஒவ்வொரு கலப்பையின் முன் பாகத்தில் இணைக்கப்பட்டுள்ளன. கத்தி உருளையின் உதவியால் மண்சுவரை நேராக வெட்டவும் புல் பூண்டு முதலியவைகளை மண்சுவருக்கு நேரே வெட்டி அவைகள் கலப்பைகளில் சிக்கிக் கொள்ளாமல் மண்ணில் புதைக்கவும் முடிகிறது. இணைப்பு எனப்படும் பாகமானது சிறு கலப்பையைப் போல் 5 செ.மீ ஆழம் வரை சென்று மண்ணை புல் பூண்டுகளோடு புரட்டி வலது பக்கம் போடுகிறது. இவ்விரு உதிரி பாகங்களின் உதவியால் இரும்புக் கலப்பை நன்றாக வேலை செய்கிறது மேலும் கலப்பையை இழுக்கத் தேவையான இழுவைத் திறனும் கணிசமாகக் குறைகிறது. கலப்பைகள் சட்டத்தில் இணைக்கப்படும் பொழுது ஒன்றன் பின் ஒன்றாக முன் கலப்பையால் தோண்டப்பட்ட சாலை, பின் கலப்பை மூடுவதற்கேற்றவாறு ஒரு கோணத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.50,000 ஆகிறது.




2. சட்டிக்கலப்பை (Disc plough)

வட்ட வடிவமான குழிவான இரும்புத் தகட்டினால் ஆன இக்கலப்பைக்குக் கொழு கிடையாது. இரும்புச் சட்டிகள் 60 செ.மீ. முதல் 90 செ.மீ வரை விட்டமுடையவை. பொதுவாக இக்கலப்பைகள் டிராக்டரின் இழுவைத் திறனுக்கு ஏற்றவாறு இரண்டு அல்லது மூன்று சட்டிகளைக் கொண்டது. உழும் பொழுது ஒவ்வொரு சட்டியும் இழுவைக் கோட்டில் முன்னோக்கி செல்வதுடன் தன்னைத் தானே சட்டியின் மையத்தை, மையமாகக் கொண்டு ஒரு அச்சின் மேல் சுழலு கிறது. இப்படிச் சுழலும் போது சட்டியின் விளிம்பு மண்ணை வெட்டி சட்டியின் மையத்தை நோக்கித் தள்ளுகிறது. சட்டி குழியாக உள்ளதால் மையத்திற்கு கொண்டு வரப்பட்ட மண் சட்டியின் மேல் பாகம் நோக்கிப் புரட்டப்பட்டு முன் வரிசை சாலின் மேல் தள்ளப்படுகிறது.

உழும்பொழுது சட்டியில் ஒட்டிக் கொள்ளும் மண்ணை அப்புறப்படுத்துவதற்காக மண் சுரண்டிகள் ஒவ்வொரு சட்டியின் மேற் பாகத்திற்குப் பக்கத்தில் அமையுமாறு சட்டத்தில் பொருத்தப்பட்டுள்ளன. உழும் ஆழத்தை ஒரே சீராக கட்டுப்படுத்துவதற்கு வளைபலகைக் கலப்பையில் உள்ளது போல் இக்கலப்பைகளிலும் ஆழக் கட்டுப்படுத்தி உருளைகள் (depth control wheel) உள்ளன. உழும்பொழுது கலப்பையின் மீது மண்ணினால் உண்டாகும் அழுத்தத்தைச் சரிகட்ட சால் உருளை (furrow wheel) எனப்படும் பாகமானது கலப்பையின் பின்






பக்கத்தில் பொருத்தப்பட்டுள்ளது. சால் உருளை சட்டியின் சாய்வுகோணத்திற்கு எதிர்ப்புறமாகக் கோணம் அமையுமாறு பொருத்தப் பட்டுள்ளதால் கலப்பையின் மீது உண்டாகும் அழுத்தமானது சரிகட்டப்படுகிறது. இதன் விலை ரூ.50,000 ஆகிறது. இக்கலப்பையைக் கொண்டு வேண்டிய இலக்கை அடைய கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இதில் குறிப்பிட்ட வரம்பிற்குள் உழவின் ஆழத்தை கூட்டவோ குறைக்கவோ சாலின் அகலத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். கடினமான நிலங்களில் உழுவதற்கேற்றவாறு எடைகளை சட்டத்தில் பொருத்துவதன் மூலம் உழவு ஆழத்தை அதிகரிக்கலாம்.

கலப்பை உழும் ஆழத்தை ஒரே சீராக வைத்துக் கொள்ளுவதற்கு ஆழக்கட்டுப்படுத்தி உருளையை தகுந்தவாறு வைத்துக் கொள்ள வேண்டும்.

கலப்பையை டிராக்டரில் இணைக்கும் பொழுது கலப்பையின் எல்லா சட்டிகளும் ஒரே அளவு ஆழம் செல்வதற்கேற்றவாறு கலப்பையின் சட்டத்தைச் சமப்படுத்த வேண்டும்.

நிலத்தில் உழுதபின்பு கலப்பையை வைக்கும் பொழுது மண், புல், பூண்டு முதலியவைகளை அப்புறப்படுத்தி வைக்க வேண்டும். கலப்பையின் எல்லாப் பாகங்களிலும் உள்ள நட்டுகளை அவ்வப்பொழுது ஸ்பேனரின் உதவி கொண்டு இறுக்கிக் கொள்ளவேண்டும். கிரீஸ் போட வேண்டிய இடங்களில் அவ்வப்பொழுது கிரீஸ் போடுவதால் கலப்பை நீண்ட காலம் பழுதடையாமல் நீடித்து உழைக்க ஏதுவாகிறது.

### 3. கொத்துக் கலப்பை (Cultivator)

இது பயிர் வளர்ச்சிக்கேற்ற பண்பட்ட நிலையை அடைய கொத்துக் கலப்பை கொண்டு நிலத்தை இளகச் செய்து கட்டிகளை மேலும் உடைக்க உதவுகிறது. ஸ்பிரிங் பொருத்தப்பட்ட கொத்துக்கலப்பை மற்ற எல்லா உழவுக் கருவிகளை விட அதிகமாக பயன்படுத்தப் படுகிறது. மணிக்கு அதிகமான நிலப்பரப்பை பண்படுத்துவதால் இதை விவசாயிகள் விரும்புகின்றனர். ஆயினும் கொத்துகளுக்கு இடையில் இடைவெளி இருப்பதால் நிலத்தை சீரான ஆழத்திற்கு பண்படுத்த இக்கருவியால் இயலாது. ஆகவே பலமுறை இக்கலப்பை கொண்டு நிலத்தைக் குறுக்கும் நெடுக்குமாக உழவேண்டும்.

இக்கலப்பையில் 9 அல்லது 11 கொத்துக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இக்கொத்துக்கள் நெம்புகோல்கள் மூலமாக ஸ்பிரிங்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஆகவே உழவு செய்யும்பொழுது கொழு அதிர்வு அடைகின்றது. உழும் பொழுது கட்டிகள் உடைபட்டு மேல்நோக்கி கொண்டு வரப்படுகின்றன. இக்கருவி சமமாக இயங்க சரிசெய்யப்பட்டு இயக்கப்பட வேண்டும். உழவின் ஆழம் டிராக்டரின் டிராப்ட் கண்ட்ரோல் லீவரால் கட்டுப்படுத்தப்படுகிறது.




கொத்துக்களில் உள்ள கொழுக்கள் (shovels) வேகமாக தேய்வு அடைவதால் அவை நீட்டி வைக்கப்படவும், திருப்பி வைக்கப்படவும் வழி உள்ளது. இருபக்கமும் தேய்ந்த கொழுக்களை மாற்றி புதிய கொழுக்களை இறுக்கமாகப் பொருத்த வேண்டும். தேய்ந்த கொழுக்களினால் டீசல் தான் விரையமாகும். மேலும் கொத்துக்களில் தேய்வு உண்டாகி அதிக சேதத்தை விளைவிக்கும். ஸ்பிரிங்குகள் எப்பொழுதும் விசையோடு கொழுக்களை இழுப்பதால் எல்லா திருப்பு முனைகளையும் திருகாணிகளையும் சரியாக பொருத்தி வைக்க வேண்டும். இக்கருவி மணிக்கு 1 ஏக்கர் பரப்பை பண்படுத்தவல்லது. இக்கருவியின் விலை ரூ.20,000 ஆகும்.

### 4. சுழல் கலப்பை (Rotavator)

நிலங்களில் உள்ள அழிக்கப்பட வேண்டியதும் எடுத்து அப்புறப்படுத்த வேண்டியதுமான செடி மற்றும் இதர புல் பூண்டுகளை வேருடன் வெட்டி அவைகளைப் பற்பல துண்டுகளாக்கி, மண்ணுடன் கலந்து, நிலத்திற்கேற்ற உரமாக்கவல்லது ரோட்டவேட்டர் என்றழைக்கப்படும் சுழல் கலப்பை. தமிழ்நாட்டில் கரும்புப்பயிர் பெருவாரியாக பணப்பயிராகவும் வணிகப்பயிராகவும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. கரும்பு சாகுபடியில் கரும்பு பயிர் வெட்டப்பட்ட பிறகு கட்டைகளைப் பெயர்த்து அடுத்த பயிர் சாகுபடிக்கேற்றவாறு நிலத்தைப் பண்படுத்துவது ஒரு கடினமான வேலையாகும். விவசாயிகள் நடைமுறை வழக்கமாக ஆட்களைக் கொண்டு கரும்புக் கட்டைகளைப் பெயர்ப்பதற்கு அதிகமான ஆட்கள் தேவைப்படுவதுடன் குறித்த காலத்திற்குள் நிலத்தை தயார் செய்ய முடிவதில்லை. தற்சமயம் வேளாண்மைத் தொழிலுக்கு வேலை ஆட்கள் கிடைப்பதில்லை. குறிப்பாக கரும்புக் கட்டைகளைப் பெயர்ப்பது போன்ற கடினமான வேலைகளுக்கு ஆட்கள் கிடைப்பது மிகவும் அரிதாகிறது. எனவே பவர்டில்லர் மற்றும் டிராக்டரினால் இயக்கப் படும் சுழல் கலப்பையை கரும்புக் கட்டையைப் பெயர்க்க பயன்படுத்தலாம். உழுது எடுத்த மண்கட்டிகளைப் பொடிப் பொடியாக்குகிறது. நிலத்தை உழுதுகொண்டு செல்லும் போதே உழுத நிலப்பரப்பை மட்டம் செய்கிறது. மேற்படி இயந்திரத்தைக் கொண்டே பாத்திகள் அமைப்பதற்கும் அமைப்பு வகைகள் கொண்டது. இதன் விலை ரூ85,000 ஆகிறது.

## கெட்ட முட்டையா நல்ல முட்டையா?



முட்டை கெட்டு விட்டதா என்பதைக் கண்டு பிடிக்க, ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கொள்ளுங்கள். முட்டைகளை ஒவ்வொன்றாக தண்ணீரில் போடுங்கள். முட்டைகள் படத்தில் காட்டியபடி தண்ணீரில் மூழ்கி பாத்திரத்தின் அடிப்பாகத்தை அடைந்துவிட்டால் நல்ல முட்டை என்று அர்த்தம். ஒரு வேளை முட்டை மிதந்தால் நாள் பட்ட பழைய முட்டை. மேலும் முட்டையை உடைத்து ஒரு கிண்ணத்தில் ஊற்றுங்கள். வெள்ளைக்கரு சற்று கலங்கி மேகம் போன்று காட்சியளித்தால் அது நல்ல முட்டை (Fresh egg) வெள்ளைக்கரு கண்ணாடியைப் போல் கலக்கமில்லாமல் இருந்தால் அது நாள் பட்ட முட்டை.




"விவசாய வேலைகளுக்குக் கூலி ஆட்கள் கிடைப்பதில் பிரச்சனை மட்டும் இல்லாம இருந்தா, செய்யிற பயிர்களிலேயே சிறந்த பயிர் மலர் பயிர்தான்" என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். சத்யா ஹைடெக் நர்சரி நடத்திவரும் உத்தரசாமி. ஈரோடு மாவட்டம், அந்தியூர் பீப்பக்காரர் தோட்டத்தில் வசிக்கும் இவர் ஒரு எம்.ஏ. பட்டதாரி. தன்னுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்துக்குக் காரணமே பல வருடங்களுக்கு முன் ஸ்பிக் வேளாண் பயிற்சி மையத்தில் தான் பெற்றுக் கொண்ட பயிற்சியும் ஆலோசனைகளும்தான் என்று கூறுகிறார்.




"ஒரு வேளை ஆள் கூலி ஜாஸ்தியாயிருந்தாலும், ஆள் கிடைக்கிறது சிரமமா இருந்தாலும் மலர்கள் பக்கமேபோகக்கூடாது. நான் 35 வருஷமா முல்லைப்பயிர் செய்துட்டு இருக்கிறேன். நல்ல லாபம் கிடைக்கிறது. தற்போது, ஒரு கிலோ முல்லை விலை ரூ.500க்கு விற்கிறது. வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் முகூர்த்த மாதங்கள் என்பதால் முல்லைக்கு நல்ல ரேட்டு கிடைக்கும். ஆடி மாசத்துலே பூ, கிலோ 50 ரூபாய்க்கு மேல விற்காது. முல்லையைப் பொறுத்தவரை சராசரியாப் பார்த்தா கிலோவுக்கு ரூ.200 - 250 விலை கிடைக்கிறது. 1 ஏக்கர் முல்லைப் பயிரிட்டதில் மட்டும், ஒரு வருஷத்துல 4.50 லட்சம் ரூபாய் வருமானம் சம்பாதிக்கிறேன். இதுல செலவுன்னு பார்த்தால் பறிப்புக் கூலிதான் அதிகமாயிடும். மொத்தச் செலவுல 40% கூலிக்குப் போயிடும். நான் ஒரு ஏக்கர் முல்லை போட்டுருக்கேன். நான், எங்க அப்பா அப்படின்னு இரண்டாவது தலை முறையா முல்லை பயிர் செஞ்சிட்டு இருக்கிறோம். ஒரு நாளுக்கு சராசரியா 10 கிலோ பூ கிடைக்கும். 10 கிலோ பறிக்க 10 ஆள் தேவைப் படும். காலை 6 மணிக்கு பூ பறிக்க இறங்கி விடுவாங்க. 3 மணி நேரத்துலே பறிச்சிட்டு 9 மணிக்கெல்லாம் கரை ஏறிவிடுவாங்க. முல்லை பயிரியிடுவதுதான் என் முதல் தொழில். முல்லையைப் பொறுத்த வரைக்கும் கோ 2 என்ற இரகம் தான் சிறப்பானது. கோ 2 முல்லை கொத்துக் கொத்தாப் பூக்கும். ஆம்பூர், நரி முல்லையை விட அதிகமா வெயிட் கிடைக்கும். பச்சை முல்லை கூட போடுறாங்க. அதிலெல்லாம் நம்ம எதிர்பார்க்கிற மகசூல் கிடைக்காது"

"நல்ல வடிகால் வசதியுள்ள செம்மண்ணும் கரிசல் மண்ணும் முல்லைக்கு ஏற்றது. நிலத்த நன்கு உழுது 1.5 மீட்டருக்கு 1.5 மீட்டர் இடை வெளியிலே குழிகள்



போடணும். ஒவ்வொரு குழியிலேயும் 10 கிலோ தொழுவுரத்தத் தாய் மண்ணோடு கலந்து குழியை நிரப்பி முல்லைப் பதியன்களை நட்டுவிட வேண்டியது தான். எங்கிட்ட இருக்கிற முல்லைக் கொடிகள் எல்லாம் பல வருஷங்களா பராமரிக்கப் பட்டவைகள். சரியா ஜனவரி 15ஆந் தேதி கொடிகளை கவாத்து பண்ணுவேன். ஏற்கனவே பூத்து முடிஞ்ச கொப்புகளையும், காஞ்ச கிளைகளையும் எடுத்துருவேன். சரியா 1 மாசத்துலே அதாவது மார்ச் 15ஆந் தேதியிலிருந்து பூக்க ஆரம்பிச்சுடும். இப்படி 245 நாட்கள் பூக்கும் அதாவது நவம்பர் மாசம் வரைக்கும் பூ எடுக்கலாம். குளிர் ஆரம்பிச்ச வுடனே பூ வரத்து நின்னு போயிடும். உரங்களைப் பொருத்த வரைக்கும் நான் சொட்டு நீர் போட்டு சொட்டு நீர் மூலமா 19 : 19 : 19, SOP, MAP போன்ற உரங்கள வாரத்துக்கு ஒரு முறை கொடுத்துருவேன். ஜனவரியில பூக்க ஆரம்பிக்கும் போது முதல்லயே ஏக்கருக்கு 10 கிலோ பூ கிடைக்கும்.”

“முல்லையிலே 2 முக்கியமான பிரச்சனை உண்டு. ஒன்று கொப்புளம் நோய். இது சூரிய வெளிச்சம் குறைஞ்சாலே வந்துரும். இரண்டாவது மொக்குத் துளைப்பான் புழு. இது நைட்ரஜன் சத்து அதிகமாக குடுத்தோமுன்னா, மொக்குகளைத் தாக்க ஆரம்பிச்சுடும். அதனால் தான் உரங்கள் கொடுக்கும் போது தழை, மணி, சாம்பல் சத்துக்களோடு நுண்ணூட்டச் சத்து களையும் சேர்த்து சமச்சீர் உரம் இட வேண்டும். மல்லிகை பூ நல்லா பூக்கணும்முனா சைட்டோ சைம் டானிக் தெளிக்கணும். நானே சைட்டோ சைம்க்கு விளம்பரம் பண்ணுறேன். அதனால அந்தியூர்ல சைட்டோசைம் கிடைக்காத கடையே இல்லன்னா பார்த்துக்கோங்களேன்”

“என் இரண்டாவது தொழில் என்னன்னு கேக்கறீங்களா. அதுதான் நிழல்வலை நாற்றங் கால். காய்கறி நாற்றுக்கள உற்பத்தி செய்து சுற்றிப்புற கிராமங்களுக்கு விநியோகம் பண்ணி கிட்டு வர்றேன். எங்கிட்டே உள்ள திறமை என்னன்னா, எந்த சீஸன்ல, எந்த பகுதியில, எவ்வளவு காய்கறி நாற்றுக்கள் தேவைப்படும் என்பத கணிச்சு வைச்சிருக்கிறது தான். ஒவ்வொரு ஊரிலும் எந்தக் காய்கறி எந்த இரகம் உபயோகிப்பாங்கன்னு தெரியும். குறிப்பாக



ஹைபிரிட் காய்கறி விதைகளை வாங்கி ஆர்டர் வர்றதுக்கு முன்னாலேயே நாற்றுப் போட்டு வைச்சுருவேன். தரமான நாற்றுக்கள் குழித்தட்டு கள்ல போட்டு உற்பத்தி செய்றதுனால நாற்று வளர வளர உடனே சேல்ஸ் ஆகிவிடும். சராசரியா நிழல் வலை நாற்றங்கால்ல மாதத்துக்கு ரூ.10,000 வருமானமா கிடைக்கும்."

"இந்த பகுதிக்கு ஏற்ற இரகங்கள் என்னன்னு கேட்கிறீங்களா? சொல்றேன் எழுதிக்கிடுங்க"

| காய்கறி | அதிக மகசூல் தரும் ஹைப்ரிட் ரகங்கள் | குறிப்புகள் |
|---|---|---|
| தக்காளி | ராசி - சாகர், சிவம்<br>சின்ஜென்டா - அபினவ்<br>நுன்ஹெம்ஸ் - லட்சுமி 5005 | ஈரோடு மாவட்டத்துக்கு ஏற்றது.<br>ஆப்பிள் தக்காளி - வெயில் தாங்கி வளரக்கூடியது |
| | யு.எஸ்.அக்ரி சீட்ஸ் | வெயில் தாங்கக் கூடியது |
| | ஜே.கே.சீட்ஸ் - நந்தினி, தேசி | |
| கத்தரி | சன்குரோ கீரின் லாங் | நீள பச்சை நிற காய்கள் |
| | மஹிகோ - எம்.ஏ.ஹெச்.ஓய் - 9 | |
| | மஹிகோ - எம்.பி.ஹெச் 12 | |
| | பவானி லோக்கல் | திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு ஏற்றது. |
| மிளகாய் | நுன்ஹெம்ஸ் - பிரியங்கா | தாராபுரம் முதல் தொப்பம்பட்டி, பழனி வரை ஏற்றது. |
| | சம்பா ரகம் | பச்சை மிளகாய்க்கு ஏற்றது நீளமானது |
| | ராசி - நிகரிகா, அனன்யா, நீளகாய். | மார்க்கெட்டில் ரெகுலர் ஆகப் போகக் கூடியவை |
| | பிஜோ - கிருஷ்ணா | |
| | யு.எஸ்.அக்ரி சிட்ஸ் 344, யு.எஸ். 622 | |

| | | |
|---|---|---|
| குண்டு ரக மிளகாய் | பீஜோ - 859 | ஒட்டன் சத்திரம் சந்தையில் விற்பனையாகக் கூடியது. |
| | சின்ஜென்டா - புல்லட் | நல்ல ரேட்டு கிடைக்க கூடியது. சம்பாவை ஒப்பிடும் போது ஒரு கிலோவுக்கு ரூ.3 அதிகம் கிடைக்கும். |
| வற்றலுக் கேற்ற மிளகாய் | நுன்ஹெம்ஸ் - பிரியங்கா | சம்பாரகம் எல்லாமே வற்றலுக்கேற்றது. |
| காலிபிளவர் | நாமதாரி ஸீட்ஸ் 555 | தென்மாவட்டங்களுக்கு ஏற்றது. அக்டோபர் - டிசம்பர் மாதங்களிலும், கிருஷ்ணகிரி, ஒசூர், பெங்களூர் பகுதிகளில் வருட முழுவதிலும் பயிர் செய்யலாம். |
| முட்டை கோஸ் | சின்ஜென்டா - குவிஸ்ஸர் | வெப்ப மண்டல பகுதிகளில் அக்டோபர் - டிசம்பர் மாதங்களிலும், கிருஷ்ணகிரி, ஒசூர், பெங்களூர் பகுதிகளில் வருட முழுவதிலும் பயிர் செய்யலாம். |
| பப்பாளி | ரெட்லேடி (நோ நியூ சீட்ஸ்) | வால் மாதிரி நீளமாக இருக்கும். சாப்பிட ஏற்றது. |
| | ஈஸ்ட் வெஸ்ட் கம்பெனி | உருண்டையாக இருக்கும். சாப்பிட மற்றும் பால் எடுக்க ஏற்றது. விதைகள் நாமக்கல், சத்ய மங்கலம், ஈரோடு பகுதிகளில் கிடைக்கும். |
| வெண்டை | மஹிகோ நம்பர் 10 | நல்ல மகசூல் |
| தர்பூசணி | சின்ஜென்டா - சுகர் குயின் | அதிக வருமானம் தரக்கூடியது |
| | ஈஸ்ட் வெஸ்ட் - ஸ்டெல்லா | |
| | நாமதாரி - என்.எஸ்.295 | |
| வெள்ளரி | ரிக்ஜவான் - வெரைட்டி<br>டெல்டா ஸ்டார் | மினி குக்கும்பர் |






திண்டுக்கல் அருகில் ரெட்டியார் சத்திரத்தில் (யூனியன் ஆபிஸுக்கு எதிரில்) தோட்டக் கலைத் துறையினரால் நிர்வகித்து நடத்தப்பட்டு வரும் காய்கறி மகத்துவ மையம் சந்தடியில்லாமல் சிறந்த ஒரு சேவையைச் செய்து வருகிறது. இந்த மையத்தின் திட்ட அலுவலரைப் பண்ணைச் செய்தி ஆசிரியர் சந்தித்த போது, தக்காளி, மிளகாய், கத்தரி போன்ற பயிர்களில் உயர் விளைச்சல் எடுக்கக்கூடிய துல்லிய தொழில் நுட்பங்களை, இப்பண்ணையில் செயல்முறைப் படுத்தி செயல் விளக்கமாக (Demonstration) விவசாயிகளுக்கு நிரூபித்து காட்டி வருவதாக கூறினார்.

உயர்ந்த வருமானம் பெற ஹைபிரிட் விதைகளைத்தான் உபயோகிக்க வேண்டும் என்றும், கண்டிப்பாக சொட்டு நீர் குழாய் அமைத்து, நீரில் கரையும் இரசாயன உரங்களைச் சொட்டுநீர் மூலமாக சரியான அளவு கொடுத்து வந்தால் நிச்சயமாக நல்ல மகசூல் பெற முடியும் என்றும் கூறினார். இவர்களுடைய பண்ணையில் தக்காளிக்கு அமைத்த பார் 90 செ.மீ அகலமும் 30 செ.மீ உயரமும் கொண்டவையாகவும் பாருக்குப்பார் இடைவெளி 4 அடியாகவும் இருந்தது. இடைவெளி அதிகமாக இருக்கிறதே என்று கேட்டபோது ஹைபிரிட் காய்கறிச் செடிகள் உயரமாகவும் படர்ந்தும் வளரும் என்றும் அவற்றிற்குத் தேவையான காற்றோட்டமும்





வெளிச்சமும் பூரணமாக கிடைக்க வேண்டுமென்றால் 4 அடி இடைவெளி அவசியம் விட வேண்டும் என்றும் கூறினார்.

இவர்கள் தக்காளி செடிகளைப் பயிரிட்டிருந்த பரப்பு முழுவதிலும் நிலப்போர்வை (பிளாஸ்டிக் மூடாக்கு ஷீட்) அமைக்கப்பட்டு இருந்தது. 25 மைக்ரான் தடிமன் கொண்ட இந்த சீட்டுகள் மேற்புறம் வெள்ளையாகவும், அடிப்புறம் கருப்பாகவும் காணப்பட்டது. மேற்புறம் உள்ள வெள்ளை நிறம் சூரியனிலிருந்து வெளிப்படும் கடுமையான உஷ்ணத்தையும் புற ஊதாக் கதிர்களையும் பிரதிபலித்து மண் அதிகம் சூடாகாமால் பாதுகாத்துக் கொள்கிறது என்றும், அடிப்புறம் உள்ள கருப்பு நிறம், ஷீட்டுக்கும் பூமிக்கும் இடையில் இருளை உண்டாக்கி களைகள் முளைக்காமல் தடுத்து விடுகிறது என்றும் கூறினார். மேலும் மூடாக்கு அமைப்பதால், நீர் ஆவியாதல் தடுக்கப்பட்டு வேர் மண்டலத்தில் வேர் வளர்ச்சியைத் தூண்டக்கூடிய துல்லிய சீதோஷ்ணம் (Micro Climate) உண்டாகிறது. இதனால் வேர்த்தொகுதியில் ஆரோக்கியமான, சத்துக்களை உடனே இழுத்துக் கொள்ளும் திறன் கொண்ட வெள்ளைநிற சல்லிவேர்கள் உருவாகிறது என்றும் கூறினார்.

பெரும்பாலும் விவசாயிகள் பார்களின் இரண்டு பக்கங்களிலும் நடுகிறார்கள். அதைக்காட்டிலும் பாரின் மையத்தில் நடுகின்ற ஒற்றை நடவு முறையே சிறந்தது என்றும் கூறினார்.

காய்கறி மகத்துவ மையத்தில் நிழல்வலை தோட்டமும் பசுமைகுடிலும் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை அல்லாமல் தோட்டக்கலை விவசாயிகள் அங்குக் காய்கறி களைக் கொண்டு வந்து விற்பனை செய்வதற்கு வசதியாக விற்பனைக் கூடமும், குளிர்சாதன அறைகளும் கட்டடப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் கூறினார்.

காய்கறி விவசாயிகளே ! ஒரு முறையாவது காய்கறி மகத்துவ மையத்திற்குச் சென்று வாருங்கள். மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# கேள்வி பதில்

**1. மிளகாயில் ஊடுபயிராக வெங்காயம் பயிர் செய்ய எவ்வளவு விதை அளவு தேவை?**

உழுதபின் 2 அடி அகலத்தில் பார்கள் அமைத்துக் கொள்ளவும். ஒவ்வொரு பாருக்குமிடையில் 1 அடி இடைவெளி வாய்க்கால் இருக்கட்டும். சொட்டுநீர் குழாய்களை ஒவ்வொரு பாருக்கும் நடுவில் இருக்குமாறு அமைத்துக் கொள்ளுங்கள். பாருக்கு நடுவில் சொட்டு நீர்க்குழாயை ஒட்டி ஹைபிரிட் மிளகாய் நாற்றுக்களை செடிக்குச் செடி $1\frac{1}{4}$ அடி இடைவெளி விட்டு நடுங்கள். இவ்வாறு நடவு செய்ய ஒரு ஏக்கருக்கு சுமார் 12,000 நாற்றுகள் தேவைப்படும். 2 அடி அகலப் பாரின் இரு புறங்களிலும், 10 செ.மீ. இடைவெளியில் சிறு வெங்காயங்களை விதைக்கவும். இதற்கு ஒரு ஏக்கருக்கு விதை வெங்காயம் சுமார் 400 கிலோ தேவை. ஊடுபயிர் செய்யவும் உபரி வருமானம் பெறவும் வெங்காயத்துக்கு நிகரான பயிர் இல்லை.

**2. நெல்லில் செவ்வட்டை நோய் தாக்கியுள்ளது. என்ன மருந்து அடிக்கணும்?**

இது நோயினால் வரும் பிரச்சனையல்ல. நுண்ணூட்டச் சத்தான துத்தநாகம் பற்றாக் குறையால் ஏற்படுகிறது. நெல், கம்பு, மக்காச் சோளம், சோளம் போன்ற தானியப் பயிர்களுக்கு துத்தநாகச் சத்து அதிகமாக தேவைப்படுகிறது. போதாக்குறைக்கு தமிழ்நாட்டிலுள்ள எல்லா மண் வகைகளிலும் குறிப்பாக, மணல் சார்ந்த மண் வகைகளில் துத்தநாகச் சத்துக் குறைபாடு அதிகமாகப் காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் நெல்லின் இலைகள் சிவப்பு நிறமாக மாறி பிறகு காய்ந்து கடைசியில் மகசூல் இழப்புக்குக் காரணமாகி விடுகிறது. அடியுரம் இடும் பொழுது ஒரு ஏக்கருக்கு 12 கிலோ சிங்க் சல்பேட்டை 25 கிலோ மணலுடன் கலந்து கடைசி உழவுக்கு முன்பு இட வேண்டும். நடவுக்கு முன் இட முடியாவிட்டால் குறைந்தபட்சம் 15 நாட்களுக்குள் இட்டுவிட வேண்டும். மேலும் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ யூரியா, $1\frac{1}{4}$ கிலோ சிங்க் சல்பேட்டு இவற்றை 100 லிட்டர் நீரில் கரைத்து நட்ட 25 நாளில் ஒருமுறையும் 45வது நாளில் இரண்டாம் முறையும் தெளிக்க வேண்டும். செவட்டை நோய் முற்றிலும் சரியாகிவிடும்.

**3. சிங்க் சல்பேட்டில் என்ன சத்துக்கள் அடங்கி யுள்ளன?**

சந்தையில் கிடைக்கும் ஸ்பிக் சிங்க் சல்பேட்டில் 21% துத்தநாகமும் 15% கந்தகச் சத்தும் அடங்கியுள்ளன.

**4. பொட்டாஷ் பாக்டீரியா பற்றி பண்ணைச் செய்தி இதழில் படித்தேன். எங்கு கிடைக்கும்?**

ரோம் விஜய் பயோடேக் என்ற நிறுவனம் பொட்டாஷ் பாக்டீரியா தயாரித்து விநியோகித்து வருகிறது. 9443239092 என்ற எண்ணில் தொடர்புக் கொண்டு பெற்றுக் கொள்ளுங்கள்.

**5. யூரியாவைக் கரைத்து வைக்கோலில் தெளித்து பால் மாடுகளுக்கு இடலாமா?**

பொதுவாக வைக்கோலில் நார் பொருட்கள்தான் அதிகம் இருக்கின்றன. புரோட்டின், வைட்டமின், போன்ற சத்துக்கள் அதிகமில்லை. இதைச்சரி செய்ய யூரியாவைத் தெளிக்கலாம். சரியான முறையை விளக்குகிறேன். கவனமாகப் படியுங்கள். 40 லிட்டர் நீரில் 4 கிலோ யூரியாவை கரைத்து வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பாலீத்தீன் ஷீட்டை தரையில் விரித்து சுமார் 100 கிலோ வைக்கோலை அதன்மீது பரப்பிக் கொள்ளுங்கள். கரைத்து வைத்திருக்கும் யூரியா கரைசலை அதன் மீது பரவலாகத் தெளிக்கவும். வைக்கோலைக் கையால் புரட்டிப் புரட்டி வைக்கோல் முழுவதும்

யூரியா கரைசலில் நனையும் வண்ணம் தெளிக்க வேண்டும். யூரியா தெளிக்கப்பட்ட வைக்கோலை காற்றுப் புகாத அறையில் அல்லது சிமெண்ட் தொட்டியில் இட்டு 2-3 வாரங்கள் வைத்து விடவும். இப்படிச் செய்வதால் அமோனியா வாயு வெளியேறாமல் தடுக்கலாம். பின்பு வெளியில் எடுத்துப் பசு மற்றும் எருதுகளுக்கு ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக அளிக்கலாம். யூரியா தெளிப்பதன் மூலம் வைக்கோலில் புரதச்சத்து அதிகரிக்கிறது. மாடுகளும் விரும்பி உண்ணுகின்றன. ஆனால் இதை 6 மாத வயதிற்கு உட்பட்ட கன்றுகுட்டிகளுக்கும் ஈனும் பசுக்களுக்கும் இடக்கூடாது. இது சிறந்த முறையாயிருப்பினும், தற்போதெல்லாம் கால்நடை மருத்துவர்கள் இந்த முறையைப் பரிந்துரை செய்வதில்லை. ஏனென்றால் சில விவசாயிகள் அளவு தெரியாமல் அதிகமாய் மாடுகளுக்குக் கொடுத்ததால் வந்த ஆபத்துதான். "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம்" என்பதை மறந்து விடக்கூடாது.

### 6. சமீபத்தில் ஸ்பிக் ஜெயந்தி என்ற உர விளம்பரம் பார்த்தேன் முழு விபரம் தேவை ?

இரசாயன உரங்களை உற்பத்தி செய்து வழங்கி வரும் ஸ்பிக் நிறுவனம், தமிழக வேளாண் புலன்களில் மண் வளம் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு ஸ்பிக் சுரபி, ஸ்பிக் தீபம், ஸ்பிக் ஜோதி போன்ற இயற்கை உரங்களையும் விநியோகித்து வருகின்றனர்.

அண்மையில் புதியதாக அறிமுகப்படுத்தப் பட்ட மற்றொரு இயற்கை உரம் தான் ஸ்பிக் ஜெயந்தி. இது விதவிதமான எண்ணெய்ப் புண்ணாக்குகளை ஒன்று சேர்த்து உருவாக்கப் பட்ட அடர் அங்கக உரம். பயிர்களுக்கு எளிதில் இடும் வகையில் வில்லை வடிவில் (Pellet Form) தயார் செய்யப்பட்டுள்ளது. எல்லாப் பயிர்களுக்கும் இட ஏற்றது. குறிப்பாக காய்கறி மற்றும் மலைத்தோட்டப் பயிர்களுக்கு நல்ல பயன் அளிக்கக்கூடியது. இது 25 கிலோ பைகளில் கிடைக்கிறது. ஒரு ஏக்கருக்கு 2 மூடை முதல் 4 மூடை வரை இடலாம். இது இடுவதனால் மண் வளம் அதிகரித்து, மண்ணிலுள்ள பாக்டீரியாக்கள் பெருகுகின்றன.

### 7. பச்சை முட்டையைக் காட்டிலும் வேக வைத்த முட்டை, வெளியில் வைத்தால் சீக்கிரமாகக் கெட்டுப் போகிறதே, ஏன்?

முட்டை ஓட்டின் மீது சிறு துவாரங்கள் இருக்கும். கோழி முட்டையிடும் போது, ஒரு வித திரவத்தை சுரந்து முட்டையின் வெளிப்பாகத்தை மூடிவிடுகிறது. துவாரங்களும் அடைபட்டு விடுகின்றன. இந்த வெளிப்பூச்சு முட்டையைப் பாதுகாத்துக் கொள்கிறது. முட்டையை கழுவினாலோ அல்லது அவித்தாலோ இப்படலம் கழுவப்பட்டு கரைந்து போய்விடுவதால் முட்டை ஓட்டின் மேலுள்ள சிறு துவாரங்கள் வழியாக பாக்டீரியாக்கள் முட்டையினுள் நுழைந்து முட்டையைக் கெடுக்க ஆரம்பித்துவிடுகின்றன. கடையில் முட்டை வாங்கியபின் கழுவாமல் அப்படியே ஃபிரிட்ஜூக்குள் வைத்துவிடுவது நல்லது.

அன்பார்ந்த விவசாயப் பெருமக்களே,

உங்கள் பகுதியில் நடைபெறும் சுவையான சம்பவங்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

வேளாண்மை சம்பந்தமான ஆலோசனை களையும், செய்திகளையும் ஆசிரியருக்கு 94433 25738 என்ற எண்ணுக்கு தெரியப்படுத்துங்கள். உங்கள் பகுதிக்கு இலவச மண்பரிசோதனை வாகனம் வர வேண்டுமென்றால் ஒரு குழுவாக அல்லது இரண்டு மூன்று கிராமங்களாக சேர்ந்து விண்ணப்பித்தால் நடமாடும் மண் பரிசோதனை வாகனத்தை அனுப்பி உடனுக்குடன் மண்பரிசோதனை பரிந்துரைகளை அளிக்க ஏற்பாடு செய்வோம்.


SPIC
ஸ்பிக் கீர்த்தி
Greenstar
நில சீர்திருத்தி மற்றும் பயிரூக்கி
(குருணை வடிவில்)
SPIC
Greenstar
SPIC
KEERTHI
Granulated Soil Conditioner
Calcium, Magnesium & Sulphur
Assures better adsorption of nutrients
Ensures high quality yield
Marketed by:
Greenstar Fertilizers Limited
CIN:U24100TN2010PLC077127
இரண்டாம் நிலை பயிர்ச்சத்துக்களான
கால்சியம், மெக்னீசியம், கந்தகம் (CMS) உள்ளடக்கியது

# ஸ்பிக் கீர்த்தி

## நில சீர்திருத்தி மற்றும் பயிரூக்கி
## (குருணை வடிவில்)

தற்போது பயிரிடப்படும் வீரிய ஒட்டு ரகங்கள் மற்றும் உயர் விளைச்சல் ரகங்களுக்கு இரண்டாம் நிலை பயிர்ச்சத்துக்களான சுண்ணாம்புச்சத்து, மெக்னீசியம், கந்தகச்சத்துக்கள் மிகவும் தேவைப்படுவதால், பயிர்களுக்கு இச்சத்துக்களை இடுதல் அவசியமாகிறது.

**சுண்ணாம்புச்சத்து** (ca): வேர்கள், தண்டு மற்றும் இலைகள் நன்கு வளர அவசியம். இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் அதிக வெப்பம், உறைபனி, புயல் மற்றும் இதர பாதிப்புகளிலிருந்து பாதுகாக்க உதவுகிறது.

**மெக்னீசியம்** (Mg): இலைகளில் பச்சையம் அதிகம் தயாரிப்பதற்கும் மற்றும் ஒளிச்சேர்க்கை சீராக நடைப்பெறுவதற்கும் உதவுகிறது. காய்கள் மற்றும் பழங்கள் இவற்றிற்கு உரித்தான நல்ல பண்புகளைப் பெற உதவுகின்றன.

**கந்தகம்** (S): பயிர்களில் புரதச்சத்து மற்றும் அமினோ அமிலங்கள் அதிக அளவு உருவாகுவதற்கு கந்தகச்சத்து அவசியம் தேவை. எண்ணெய் வித்துப்பயிர்களில் எண்ணெய் வளத்தை பெருக்கவும், காய்கறிப்பயிர்களான வெங்காயம், மிளகாய், முள்ளங்கி போன்ற பயிர்களில் நறுமணம் அதிகரிக்கவும் உதவுகிறது.

**இடும் முறை மற்றும் அளவு:-** அனைத்துப் பயிர்களுக்கும் அடியுரமாகவும், மேலுரமாகவும் ஒவ்வொரு முறையும் ஒரு ஏக்கருக்கு 50 -100 கிலோ சிபாரிசு செய்யப்படுகிறது. நீண்ட காலப் பயிர்களுக்கு இரண்டு முறையும், தொடர் பயிர்களுக்கு ஆண்டுக்கு மூன்று முறையும் இடுதல் வேண்டும்.

**நன்மைகள்:**

- மண்ணின் களர் மற்றும் உவர் தன்மையை நீக்குகிறது
- மண்ணின் மின் கடத்தி திறனை சீரான நிலையில் வைக்கிறது
- பயிர்களில் ஒளிச்சேர்க்கை நன்கு நடைபெற உதவுகிறது
- பயிர்களுக்கு நோய் எதிர்ப்புசக்தியை தருகிறது
- பயிர்களுக்கு வறட்சியை தாங்கும் தன்மை அதிகரிக்கச் செய்கிறது
- வெங்காயம், பூண்டு, கடுகு போன்றவற்றில் காரத்தன்மையையும், காய்கள் மற்றும் பழங்களின் சுவையையும் அதிகரிக்கிறது




Greenstar

*Marketed by:*
**Greenstar Fertilizers Limited**
Muthiapuram Post, Tuticorin - 628 005.
*Customer Care No: 044 2230 0010*
*Customer Care E-mail : feedback@greenstar.net.in*

**எல்லா ஸ்பிக் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.**

Registered with the Registrar of Newspaper for India. No. TNTAM/2011/36993
SPIC Pannai Cheithi Tamil bi-monthly Dec 2014 - Jan - 2015




Published by : N. Nachiappan on behalf of Southern Petrochemical Industries Corporation Limited and Published from SPIC Ltd., Muthaiahpuram, Tuticorin - 628 005, Tuticorin Dist., Tamil Nadu. and Printed by S. Daisy Rani at M/s. Chitrakannan Process, Old No. 6/78D, New No. 6/37, Samypuram Colony, Bye-pass road, Sivakasi - 626 189. Editor : T.V. David.